**செ.வெ.எண்: 56** **நாள்: 23.01.2017**

## பத்திரிகைச்செய்தி

**தேசிய ஊனமுற்றோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (NHFDC) திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு மிகக்குறைந்த வட்டி விகிதத்தில் வங்கிக்கடன் வழங்கிட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தி வருகிறது. அவர்கள் சுயமாக தொழில்புரிந்து வருவாய் ஈட்ட மாற்றுத்திறனாளிகளின் நலத்துறை மூலம் கடனுதவி வழங்கப்பட்டு வருவதோடு மட்டுமல்லாமல் பிற துறைகளாலும் மாற்றுத்திறனாளிகளுக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதில் தேசிய ஊனமுற்றோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் (NHFDC) திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மூலமாக வங்கிக் கடன் மிகக்குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் ரூ.25,000/-வரை 1 நபர் ஜாமீன் பெற்றும் மற்றும் ரூ.25,000/- க்கு மேல் ரூ.50,000/- வரை 2 நபர்கள் ஜாமீன் பெற்றும் கடனுதவி வழங்கப்படுகிறது. அதற்கு மேற்பட்ட தொகை சொத்து அடமானத்தின் பேரில் கடனுதவியாக வழங்கப்படுகிறது. அதன்படி, இத்திட்டத்தில் அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் வரை கடனுதவி பெறலாம். மேலும் ரூ.50,000/- வரை கடனுதவி பெறும் கை, கால் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி ஆண்களுக்கு 5 %, வட்டியிலும், பெண்களுக்கு 4 % வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்பட உள்ளது. சொத்து அடமானத்தின் பேரில் ரூ.50,000/- க்கு மேல் ரூ.5 இலட்சம் வரை கடன் பெறுபவர்களை பொறுத்தவரை கை, கால் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி ஆண்களுக்கு 6 %, வட்டியும், பெண்களுக்கு 5 % வட்டி விகிதத்தில் வங்கிக்கடன் வழங்கப்பட உள்ளது. ரூ.5 இலட்சத்துக்கு மேல் ரூ.15 இலட்சம் வரை கடனுதவி பெறும் கை, கால் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி ஆண்களுக்கு 7 %, வட்டியும், பெண்களுக்கு 6 % வட்டி விகிதத்தில் வங்கிக்கடன் வழங்கப்பட உள்ளது. மேலும் ரூ.15 இலட்சத்துக்கு மேல் ரூ.25 இலட்சம் வரை கடனுதவி பெறும் கை, கால் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி ஆண்களுக்கு 8 %, வட்டியும், பெண்களுக்கு 7 % வட்டி விகிதத்தில் வங்கிக்கடன் வழங்கப்பட உள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள கடனுதவிகளில் கடனுதவி பெறும் மனவளர்ச்சிகுன்றிய/பார்வையற்ற/ காது கேளாத மற்றும் வாய்பேச இயலாதவர்களுக்கு கூடுதலாக அரை சதவிகிதம் (0.5%) வட்டி தள்ளுபடியுடன் கடனுதவி வழங்கப்படும்.

இத்திட்டங்களில் கடனுதவி பெற விரும்பும் மாற்றுத்திறனாளிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், புதுக்கோட்டையை அணுகி கடனுதவிக்கான விண்ணப்பத்தினை பெற்று 31.01.2017 வரை விண்ணப்பித்து பயனடையலாம் என்றும் மேலும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான கடனின் மாதாந்திர தவணைகளை நிர்ணயிக்கப்பட்ட தேதியிலோ அதற்கு முன்னரோ செலுத்துபவர்களுக்கு வட்டி ஏதும் வசூலிக்கப்படமாட்டாது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**